முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா.1 தேதி. 26.06.2025

| OS.No. | 185/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சம் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களாக 20.02.1987 தேதியிட்ட வாதியின் பெயரில் கிரய சாசனம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.1** ஆகவும், ஸ்ரீவெங்கடேஸ்வரா நகர் அப்ரூவல் பிளான் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.2** ஆகவும், 03.09.2003 தேதியில் வட்டாச்சியர் வழங்கிய உட்பிரிவு மற்றும் பட்டா மாற்றம் செயல்முறை ஆணையின் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், மயிலாடுதுறை வட்டாச்சியர் வழங்கிய பட்டா மாற்ற உத்தரவு நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.4** ஆகவும், 08.11.2019 தேதியில் வீட்டுமனை வரி ரசீது நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.5** ஆகவும், 05.08.2013 தேதியிட்ட நாகப்பட்டினம் நில அபகரிப்பு ஆய்வாளருக்கு வாதி அனுப்பிய புகார் மனு நகல் **வா.சா.ஆ.6** ஆகவும், மயிலாடுதுறை வட்டாட்சியர் துணை காவல் கண்காணிப்பாளருக்கு எழுதிய கடித நகல் **வா.சா.ஆ.7** ஆகவும், 13.10.2017 தேதியிட்ட மயிலாடுதுறை காவல் ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 16.10.2017 வாதியின் மனுவை காவல் ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ.9** ஆகவும், 02.11.2018 தேதியிட்ட நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர், நில அபகரிப்பு

தடுப்பு பிரிவு கண்காணிப்பாளர் நாகப்பட்டினம், காவல் ஆய்வாளர் மயிலாடுதுறை ஆகியோருக்கு கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.10** ஆகவும், மேற்படி புகார் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான 07.11.2018 தேதியிட்ட ஏற்பளிப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.11** ஆகவும், 07.01.2020 தேதியில் நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர், நில அபகரிப்பு தடுப்பு பிரிவு கண்காணிப்பாளர் நாகப்பட்டினம், காவல் ஆய்வாளர் மயிலாடுதுறை ஆகியோருக்கு கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.12** ஆகவும், மேற்படி புகார் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஏற்பளிப்பு கடிதம் அசல் **வா.சா.ஆ.13** ஆகவும், 02.12.2021 மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியருக்கும் வாதி அனுப்பிய கடிதம் நகல் **வா.சா.ஆ.14** ஆகவும், 20.04.2024 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.15** ஆகவும், பிரதிவாதிக்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பு திருப்பப்பட்ட கவர் அசல் **வா.சா.ஆ.16** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.